## முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் –

# மாநில சுயாட்சிக் குழு அறிவிப்பும் அதன் அவசியமும்!



தமிழ்நாடு அரசுக்கும் - மாநில ஆளுநருக்குமான வழக்கில் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு இந்தியா முழுவதும் பெரிய அதிர்வலைகளை உருவாக்கியுள்ளது. ஒன்றிய - மாநில உறவுகள் குறித்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பு ஆளுநர்களின் அதிகார எல்லைக்கு ஓர் சரியான தீர்ப்பாகும்.

தற்போதைய சூழலில் இந்தியாவில் மாநிலங்களின் அதிகாரங்களில் படிப்படியாகக் ஒன்றிய அரசு ஆக்கிரமிப்பு செய்து வருகிறது. ஒன்றியம்-மாநிலங்கள் இருவரும் பயன்படுத்த பொதுப் பட்டியல், ஒன்றிய அரசாங்கத்திற்கான பட்டியல், மாநில அரசாங்கத்திற்கான பட்டியல் என அதிகாரங்களைக் கொண்ட கூட்டாட்சியாக இந்தியா இருந்து வருகிறது.

ஒன்றிய அரசினை பா.ஜ.க. கூட்டணி ஆளுகிறது. மாநிலங்களை பல்வேறு மாநிலக் கட்சிகளும் சில மாநிலங்களில் பா.ஜ.க.வும் சில மாநிலங்களில் காங்கிரஸும் ஆட்சி புரிகின்றன. பா.ஜ.க. ஆட்சி புரியாத மாநிலங்களில் அந்தந்த மாநில ஆளுநர் மாநில அரசை ஆட்சி செய்ய விடாமல் தொடர்ந்து இடையூறு செய்து வருகிறார்கள்.

பொதுப் பட்டியல் உள்ள அதிகாரங்களை ஒன்றிய அரசே பெரிதாக பயன்படுத்தி வருகிறது. மாநில அரசில் அதைப் பயன்படுத்துவதில் பெரிய அளவில் இடையூறு உள்ளது. ஆனால் பொதுப் பட்டியலில் மாநிலங்களுக்கானது

இதனை மனதில் கொண்டு மாநில - ஒன்றிய அதிகாரங்களையும் பொதுப் பட்டியல் அதிகாரங்களையும் ஆய்வு செய்து ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து முடிவெடுக்க எண்ணி இது தொடர்பாக

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த ஏப்ரல் 15, 2025 அன்று மாநிலங்களின் உரிமைகளை பாதுகாக்கும் நோக்கில் ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி குரியன் ஜோசப் அவர்கள் தலைமையில் உயர்நிலை குழுவை அமைத்து சட்டமன்றத்தில் அறிவிப்பு செய்தார். இந்தக் குழுவின் உறுப்பினர்களாக ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி மற்றும் கடல்சார் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் கே.அசோக் வர்தன் ஷெட்டி அவர்களையும் சென்னைப் பல்கலைக்கழக ஓய்வு பெற்ற பொருளாதார பேராசிரியர் டாக்டர் எம்.நாகநாதன் (மேனாள் துணைத் தலைவர் மாநில திட்டக் குழு) அவர்களையும் நியமித்துள்ளார்.



வழக்கறிஞர்
**டாக்டர் வி.ஆர்.எஸ். சம்பத்**
ஆசிரியர், சட்டக்கதிர்

இந்தக் குழுவில் இடம் பெற்றுள்ள நீதிபதி குரியன் ஜோசப் அவர்கள் உச்சநீதிமன்றத்தில் தலைசிறந்த தீர்ப்புகளை வழங்கியவர், அசோக் வரதன் ஷெட்டி தலைசிறந்த நிர்வாகி, அறிவுபூர்வமாக சாதனைகளை புரிந்தவர். தொடர்ந்து கட்டுரை எழுதி வருபவர் பல்வேறு சொற்பொழிவுகளை ஆற்றி வருபவர் டாக்டர் எம். நாகநாதன், சென்னைப் பல்கலைக்கழகத்தில் பொருளியல் பேராசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றவர். மாநில திட்டக் குழு துணைத் தலைவராக பணியாற்றி மாநில பொருளாதார வளர்ச்சிக்கு பெரிதும் பாடுபட்டவர். இதற்கு முன்னர் 2007ல் ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்ட நிர்வாகச் சீர்திருத்த ஆணையத்திற்கு தமிழ்நாடு அரசின் சார்பில் விரிவான விளக்க அறிக்கையினை தயார் செய்து அரசின் சார்பில் அனுப்பியவர். கனடாவில் கூட்டாட்சி குறித்த சிறப்புக் கல்வியைப் பெற்றவர். பல நூல்கள் எழுதியுள்ளார். சட்டம் படித்துள்ளார்.

இந்த மூவர் குழு கீழ்க்கண்ட தலைப்புகளில் விரிவான அறிக்கையினை தயார் செய்வார்கள்

- மாநில பட்டியலில் இருந்து ஒருங்கிணைந்த பட்டியலுக்கு மாற்றப்பட்ட தலைப்புகளை மீண்டும் மாநில பட்டியலுக்கு மாற்றும் வாய்ப்புகளை ஆய்வு செய்தல்.
- ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசுகளின் உறவுகளை மேம்படுத்தும் பரிந்துரைகள் வழங்கல்.
- மாநிலங்களின் அரசியல், நிர்வாக, சட்ட மற்றும் நிதித் துறைகளின் சுயாட்சி உறுதி செய்யும் வழிகளை பரிந்துரைத்தல்.
- நீட் தேர்வு, மூன்று மொழிக் கொள்கை, தேசிய கல்விக் கொள்கை (NEP 2020), ஜி.எஸ்.டி., வரம்பு மறுசீரமைப்பு (delimitation) போன்ற விவகாரங்களின் மாநிலங்களின் உரிமைகளை உறுதி செய்தல். இந்தக் குழுவின் இடைக்கால அறிக்கையினை ஜனவரி 2026 இறுதியில் வழங்க வேண்டும் எனவும் முழு அறிக்கையினை இரண்டு ஆண்டுகளில் வழங்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் முதலமைச்சராக பதவியேற்றவுடன் தமிழ்நாடு அரசு 1969இல் சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி ராஜமன்னார் தலைமையில் ஒரு குழு அமைத்து ஒன்றிய -மாநில அதிகாரங்கள் குறித்து ஆய்ந்து ஓர் அறிக்கை சமர்ப்பித்தார்கள். இந்த பரிந்துரைகளை இன்று வரையில் ஒன்றிய அரசு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

2002இல் பிரதமர் வாஜ்பாய் காலத்தில் உச்சநீதிமன்ற ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி வெங்கட்ட செல்லைய்யா தலைமையில் ஓர் குழு அமைத்து ஒன்றிய மாநில அதிகாரங்கள் நிர்வாக சீர்திருத்தம், அரசியல் சட்ட திருத்தம் குறித்து பரிந்துரைக்க ஓர் குழு அமைக்கப்பட்டு அறிக்கையும் பெறப்பட்டு எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் கிடப்பில் உள்ளது.

இதனைத் தொடர்ந்து 2007இல் டாக்டர் மன்மோகன் சிங் பிரதமராக இருந்தபோது உச்சநீதிமன்ற நீதிபதி பூஞ்ச் தலைமையில் ஒன்றிய -மாநில உறவுகள், அதிகாரங்கள், நிர்வாகச் சீர்திருத்தம் முடிந்து விரிவான அறிக்கை தயார் செய்யப்பட்டு ஒன்றிய அரசுக்கு வழங்கப்பட்டது. அதிலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

நமது முதலமைச்சர் அவர்களால் ஒன்றிய -மாநில அதிகாரங்கள் குறித்து ஆய்வு செய்யும் குழு அமைப்பு குறித்த அறிவிப்பு இன்றைய சூழ்நிலையில் கூட்டாட்சி இந்தியாவை வலிமைப்படுத்தவும் மாநிலங்கள் சுயமாக இயங்கவும் வளர்ச்சியை நோக்கி பயணிக்கவும் பெரிதும் பயன்படும்.



திருவெண்ணெய்நல்லூர் பேரூர் முன்னாள் நகரச் செயலாளர் தி.மு.நாவளவனின் தம்பி மோகன் (சத்துணவு ஓய்வு) அவர்களை முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி உடல்நலம் விசாரித்து ஆறுதல் கூறினார். மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், ஒன்றியச் செயலாளர் பி.வி.ஆர்.சு.விசுவநாதன், பேரூர் செயலாளர் பூக்கடை கணேசன், ஒன்றியக் குழுத் தலைவர் ஓம் சிவ சக்திவேல் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

## கால்நடை பராமரிப்புத் துறையில்

# அரசின் அறிவிப்புகளை விரைந்து நிறைவேற்றிட வேண்டும்!

### 34 பேருக்கு பதவி உயர்வு ஆணைகளை வழங்கி – அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் அறிவுறுத்தல்!

*சென்னை, மே. 20 -*

தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப்பணிகள் இயக்குநர் அலுவலக மாநாட்டுக் கூட்ட அரங்கத்தில் 15.05. 2025 அன்று, 34 அரசு ஊழியர்களின் பதவி உயர்வு ஆணைகளை வழங்கி, அரசு அறிவிப்புகளை விரைந்து முடிக்க மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன் அறிவுறுத்தினார்.

மேலும், கால்நடை பராமரிப்புத்துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் மற்றும் பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

மீன்வளம், மீனவர் நலம் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கால்நடை பராமரிப்புத்துறையின் வாயிலாக, கால்நடைகளின் நலனை காக்கவும், விவசாயிகளின் வருமானம் பெருக்கும் நோக்கத்தோடும், செயல்படுத்தப்பட்டு வரும் துறையின் முக்கிய நடவடிக்கைகள், திட்டங்கள், உட்கட்ட மைப்புகள், பண்ணைகள் குறித்த செயல்பாடுகள் மற்றும் துறையின் இதர பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

அமைச்சர் மாவட்டம் வாரியாக "முதல்வரின் முகவரி துறை" கீழ் பெறப்பட்ட மனுக்களின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டு, நிலுவையில் உள்ள மனுக்களின் மீது துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

அமைச்சர் கிராமப்புற கால்நடை விவசாயிகளுக்கு சிறந்த முறையில் கால்நடை மருத்துவம் மேற்கொள்ளும் நோக்கத்தோடு, துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு உட்கட்டமைப்பு பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர அறிவுறுத்தினார்.

மேலும், கால்நடைகளை நோய்களில் இருந்து காத்திட மேற்கொள்ளப்படும் அனைத்து தடுப்பூசிப் பணிகளையும் தங்கு தடையின்றி செயல்படுத்திட அறிவுரை வழங்கினார்.

அமைச்சர் அவர்கள் பசுந்தீவனம் ஆண்டு முழுவதும் கிடைக்கும் நோக்கில், பசுந்தீவன உற்பத்தியை அதிகரித்திட செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங் களை குறித்து ஆய்வு மேற்கொண்டு, கிராமப்புற நிலமற்ற விவசாயிகளின் கால்நடைகளுக்கு



பசுந்தீவனம் ஆண்டு முழுவதும் கிடைத்திட வலியுறுத்தினார். மேலும், துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் கால்நடை பண்ணைகளின் செயல்பாடுகள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டு, இப்பண்ணைகள் வாயிலாக கிராமபுற கால்நடை விவசாயிகள் பயன் பெற ஏதுவாக பண்ணைகள் செயலாற்றிட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

அமைச்சர் அவர்கள், கிடேரி கன்றுகள் பிறப்பினை அதிகரிக்கும் நோக்கத்தோடு செயல்படுத்தப்பட்டு வரும் பாலினம் பிரிக்கப்பட்ட உறைவிந்து செயற்கை முறை கருவூட்டலின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். வருடத்திற்கு ஒரு கன்று எனும் இலக்கினை அடைவது குறித்து கால்நடை வளர்ப்போருக்கு விழிப்பு ணர்வு ஏற்படுத்தவும், சிறந்த கால்நடை பராமரிப்பு முறைகள் குறித்த விழிப்புணர்வு மற்றும் திறன் மேம்பாடு மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

அமைச்சர் அவர்கள், கால்நடை மருத்துவ சேவைகள் கிடைக்காத தொலைதூர கிராமப்புற பகுதிகளில் கால்நடை மருத்துவ சேவைகளை வழங்கும் பொருட்டு செயல்படுத்தப்பட்டு வரும் நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகளின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, அனைத்து ஊர்திகளும் ஆண்டு முழுவதும் சேவைகள் வழங்கிட உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

இவ்வாய்வுக் கூட்டத்தில் கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அரசு செயலாளர் மரு.ந. சுப்பையன், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப்பணிகள் இயக்குநர், இரா.கண்ணன் துறையின் கூடுதல் இயக்குநர்கள், மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## நாளை நடைபெறுகிறது!

# திருப்பத்தூர் மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் க.தேவராஜ் அறிக்கை!



திருப்பத்தூர், மே 20 -

திருப்பத்தூர் மாவட்ட திமுக அவசர செயற்குழு கூட்டம் நாளை நடைபெறுகிறது என்று மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

திருப்பத்தூர் மாவட்ட திமுக அவசர செயற்குழு கூட்டம் நாளை (21.5.2025 -புதன்கிழமை) காலை 10.00 மணியளவில் நாட்றம்பள்ளியில் உள்ள அலுவகத்தில் மாவட்ட அவைத் தலைவர் ஆர்.எஸ். ஆனந்தன் தலைமையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற தொகுதி தேர்தல் பார்வையாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் .

பொருள் : 1.மதுரையில் ஜூன் 1 ஆம் நடைபெற உள்ள மாநில பொதுக்குழு கூட்டத்தில் பங்கேற்பது குறித்து,

2.BLA 2, BLC பணிகள் குறித்து,

3.கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, விழுப்புரம், கோலியனூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் சார்பில் விழுப்புரம் மத்திய மாவட்டக் கழகப் பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் துப்புரவு பணியாளர்களுக்கு நலவாரிய அட்டை மற்றும் துப்புரவு வாகனங்களை வழங்கினார். உடன் கோலியனூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் பி.தெய்வசிகாமணி, கோலியனூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் இ.சச்சிதானந்தம், மாநில தூய்மை பணியாளர் நல வாரிய உறுப்பினர் டி.கண்ணன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் டி.என்.ஜெ.சம்பத், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் இரா.கேசவன், அவைத் தலைவர் வழக்கறிஞர் இரா.கண்ணப்பன், ஒன்றிய கவுன்சிலர் சாலை சந்திரசேகர், ஒன்றிய துணை செயலாளர்கள் ரீதர், ராமச்சந்திரன், ஜெயந்தி ராஜகணேஷ், ஊராட்சி மன்ற தலைவர்கள் இருசன், மணிவேல் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

